# காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி

# மேடவாக்கம், சென்னை

## வினா வங்கி விடைகள்

## இரண்டாமாண்டு

1. எட்டுத்தொகையில் புறம் சார்ந்த நூல் எது?
   புறநானூறு
2. புறநானூற்றின் அடிவரையறை என்ன?
   4 முதல் 40 அடி வரை
3. புறநானூற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
   ஜி.யு.போப்
4. புறநானூறு எத்தனை புலவர்களால் பாடப்பட்டுள்ளது?
   153
5. புறநானூற்றின் வழி அறியலாகும் செய்திகள் யாவை?

   மன்னனின் புற ஒழுக்கங்களான போர்த்திறம், வள்ளமை, மகளிர் மாண்பு, சான்றோர்களின் இயல்பு, நடுகல் வழிபாடு, கைம்மை நோன்பு, உடன்கட்டை போன்ற பண்பாட்டுக் கூறுகளும் வரலாற்றுச் செய்திகளும் உடைய தமிழர்களின் வாழ்வியலை எடுத்து இயம்புகின்றன.

6. புறநானூற்றில் குறிப்பிடப்பெறும் புறத்திணைகள் யாவை?

   புறத்திணைகளான வெட்சி, வஞ்சி, காஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் ஆகிய ஏழு திணைகளைக் குறிப்பிட்டு புற ஒழுக்கங்களைக் கூறுகின்றன.

7. “எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
   சிறுவன் மள்ளரும் உளரே” இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.
   நூல்: புறநானூறு, பாடியவர்: ஔவையார், பாடப்பட்டோர்: அதியமான்
   பொருள்: வேந்தே! நீ போர் செய்யக் கருதுவாய் ஆயின் எம்முடைய நாட்டின் கண்ணே அடிக்கும் கோலுக்கும் அஞ்சாது எதிர் சீண்டும் பாம்பு போன்ற இளைய வலிமையான வீரரும் உள்ளனர்.
8. எட்டுத்தைாகையில் ஓர் ஒழுங்கு முறையில் தொகுக்கப்பட்ட முதல் நூல் எது?
   அகநானூறு
9. எட்டுத்தொகையில் அகம் என்னும் பெயரால் அமைந்த நூல் யாது?
   அகநானூறு
10. யவனர், நந்தனர் பற்றிய வரலாற்றினைக் கூறும் நூல் எது?
    அகநானூறு
11. அகநானூற்றின் மூன்று பெரும் பகுதிகள் யாவை?
    களிற்றியானை நிரை - 1 - 120

Scanned by CamScanner

மணிமிடைபவளம் - 120 - 300

நித்திலக்கோவை - 300 – 400

12. அகநானூற்றில் பாலைத்திணையில் அமைந்த பாடல் எண்களின் வரிசைமுறை யாது?

1,3,5,7,9 எனும் ஒற்றைப்படை எண்களில் அமைந்த பாடல்கள்

13. அகநானூறு பெயர்க்காரணம் கூறுக.

அகம் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டவை அகநானூறு. 'நெடுந்தொகை' என்றும் வழங்கப்பெறும். 13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லையும் கொண்டவை. முதல் 120 பாடல்கள் களிற்றியானை நிரை எனவும், 121 – 300 வரையுள்ள பாடல்கள் மணிமிடை பவளம் எனவும், 301 – 400 வரையுள்ள பாடல்கள் நித்திலக்கோவை எனவும் மூன்று பகுதிகளாக அமைவன. ஒற்றைப்படை எண்ணால் முடியும் 200 பாடல்கள் 1,3,5,7,9 பாலைத்திணை எனவும், 4,14 என்று அமைபவை 40 பாடல்கள் முல்லைத் திணை எனவும், 6,16 என்று முடியும் 40 பாடல்கள் மருதத்திணை என்றும், 10,20 என்று அமையும் 40 பாடல்கள் நெய்தல் திணை என்றும், 2,8,12,18 என்ற எண்ணில் முடியும் 80 பாடல்கள் குறிஞ்சித் திணை என்றும் அமைபவை.

14. பாலைநிலக் காட்சியை அகநானூறு பாடல்வழி குறிப்பிடுக.

பாலை நிலம் கொடிது என்பதால் அப்பகுதி குறித்த வருணையைச் சிறப்பித்துப் பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ, தலைவன் பிரிந்து செல்லும் பாலை நிலமானது. புலவிடத்தும் பாற்பசுக் கூட்டம் சேர்ந்துள்ள பாணாடென்னும் அவ்விடத்தே நீண்ட சீழ்க்கை ஒலியை உடைய கோவலர் தோண்டிய கிணற்றிலிருந்து முகந்த, வளைந்த வாயினை உடைய பத்திலினின்று(பானை) நீர் வடிந்து செல்லும் சிறிய குழி, நீரின்றிக் காய்ந்துள்ளது. அவ்விடத்தில் வருத்தத்துடன் நீர் வேட்கை தணிய, வேறிடம் செல்ல இல்லாது பெரிய யானைகள் மிதித்து உண்டாகிய அடிச்சுவட்டில் பெரிய புலிகள் அடி வைத்து நடந்து சென்று வேற்று நிலமாகிய ஈரமுடைய வழிகள் உள்ளன. குற்றமற்ற நாவினை உடைய கூத்தர், தோலின் பின்னே கட்டிய மார்ச்சனை அமைந்த மத்தளத்தின் கண்ணிடத்தே விரலால் எறிந்த வடுக்கள் போலத் தோன்றும் மரங்கள் வாடிய இடங்களை உடைய மலையை தலைவன் கடந்து சென்றான் என்பதிலிருந்து பாலை நிலத்தின் நீரற்ற கொடிய வறட்சித் தன்மையைப் பாலைப் பாடிய பெருங்கடுங்கோ காட்சிப்படுத்தியுள்ளார்.

15. செவிலித்தாய் தலைவிக்கு அறிவுறுத்தியது யாது என்பதனை கயமனார் பாடல்வழி நின்று விளக்குக.

கயமனார் பாடிய பாலைத்திணைப் பாடலில் செவிலித்தாய் தலைவிக்கு அறிவுறுத்துவது யாதெனில் நீ எங்கும் என்னை விட்டு நீங்காதே என்பது. அறிவினை உடைய இளைய மகளே, நீ பருவ வளர்ச்சி கொண்டாய், கூரிய பற்கள் ஒளி கொண்டன. கூந்தல் முடித்தல்

Scanned by CamScanner

அமைந்தன. தண்ணிய தழையுடை கொண்டனை ஆதலின் கழன்று திரியும் உன் ஆயத்தாருடன் எங்கேயும் போகற்க. தொன்மை வாய்ந்த இந்தப் பதியின் இடங்கள் தாக்கி வருத்தும் தெய்வங்களை உடையன இவற்றால் நீ காவலும் எய்தினை. இனி நீ நம் வாயிலகத்தும் போகற்பாலை அல்ல. நீ பேதைப் பருவத்தினை அல்லை. இப்பெதும்பை பருவத்து நீ புறத்துப் போனாய் என்னை என்று நான் அது கேட்டு பொன்னால் இயன்ற புலிப்பல்லொடு கோக்கப்பெற்ற தனி மணித்தாலியினையும் தழைத்த அசோகம் தளிராலாய் தழையுடையால் மாண்புறும் இடையினையும் உடைய பலாவினது சிறந்த களைகளை உண்ணும் முகக்கலைகளால் உதிர்க்கப்பெற்ற தலையில் ஆர்க்கினை உடைய வெள்ளிய பலா வித்துக்கள் மலையிடத்தே பொருந்திய சிறிது குடியை உடைய கானவன் மகளாகிய என் மகள். அவள் குற்றத்தினை நான் அறிந்தமைக்கு அஞ்சினான். அஞ்சிய அவள் தலைவனோடு சென்ற வழியிடங்களினைத் தேடி கண்டறிந்தும் காண இயலவில்லை.

எங்கள் நல்ல இல்லம் அரிய காவலைக் கடந்து வலையினை முன்னர் காணும் பெண்மான் அதனைத் தப்பியோடுமாறு(விரைந்து) சென்று தோற்றம் இல்லாத வெள்ளிய வேலினை உடைய ஒரு தலைவனோடு இச்சுரத்தே இந்நெறியில் சென்றனள். அப்பொழுதே அருஞ்சுரத்துக் கள்வர் பசுக்களைத் தொழுவினின்றும் கொண்ட கன்றனராக அவர்கள் பின் சென்று செய்யும் போரினைப் போலப் பின்னே தொடர்ந்து செல்லுமிடங்களில் எல்லாம் ஓடி அவள் மேனியை அணுகப் பெற்றிலேன். இவ்விடத்து உன்னிடம் வினவுகின்றதை விரும்பிக் கேட்டு அவர்கள் செல்லும் நெறியினைக் கூறுவாயாக என்று இனிய முழக்கம் கொண்ட ஆண்மானாகிய இளைய மானிடம் வினவுகின்றாள்.

16. பரணர் பாடிய குறிஞ்சித்திணைப் பாடலின் பொருள் யாது?

தலைவி, தலைவன் சிறைப்புறத்தானாக தோழி கேட்கும்படியாகக் கூறியவற்றை அகநானூறு குறிஞ்சித் திணைப் பாடலில் பரணர் எங்ஙனம் விவரித்துள்ளார்.

முழையை ஒத்த மிக்க கள்ளினையும் ஆரவாரத்தினையும் உடைய இந்த முதிய ஊரானது விழா இல்லையாயினும் துயிலப் பெறாதாகும். வளமை சான்ற கடைத்தெருவும் ஏனைய தெருக்களும் ஒருங்கே உறங்கி ஒலி அடங்கினும் வலிய ஒலியுடன் கூடிய கொடிய சொற்களை உடைய அன்னை உறங்காள். பிணித்தலைக் கொண்ட அரிய சிறையினைப் போன்ற அன்னை உறங்கினும், துயிலாத கண்களை உடையராய் ஊர் காவலர் விரைந்து சுழல்வர். விளங்கும் வேலினராகிய அக்காவலர் துஞ்சினும் கூரிய பல்லினையும் வலமாகத் தரிதலுடைய வாயினையும் உடைய நாய் குரைக்கும். ஒலிமிக்க வாயினை உடைய நாய் குரையாது உறங்கினும் பகலின் ஒளியினை ஒக்க நிலவினைத் தந்து வானின் கண் அகற்சி வாய்ந்த மதியம் விளங்கிப் பரவும். திங்கள் மேற்கு மலையினை

Scanned by CamScanner

அடைந்து மிக்க இருள் தங்கின் இல்லிலுள்ள எலியை இரையாகக் கொண்ட வலிய வாயினதான கூகையின் சேவல், பேய்கள் திரியும் நள்ளிரவில் அழிவு உண்டாகக் குழறும். பொந்தில் வாழும் அச்சேவல் வறிதே உறங்கின் மனையில் தங்கிய கோழிச்சேவல் மாண்புற்ற குரலை எழுப்பிக் கூவும். ஒரு நாள் இவையெல்லாம் ஒழிந்த காலத்தினும் நிலை பெறாத நெஞ்சினை உடைய நம் தலைவர் வருதலிலர்.

நமது இந்த களவொழுக்கம் பரல் பெய்துள்ள கெச்சை ஒலிக்க வேகத்தால் சிறந்து ஆதியெனும் கதியிலே தேர்ச்சியுற்ற பாயும் செலவினை உடைய நல்ல குதிரைகளை உடைய தித்தன் என்பானது மதிலாகிய வேலியை உடைய உறையூரைச் சூழ்ந்துள்ள கற்கள் நிறைந்த காவற்புறங்காடு போன்ற பல தடைகளை உடையதாகின்றது என்று எடுத்துரைத்தாள்.

17. ஔவையார் பாடிய புறப்பாடலின் கருத்து யாது?

ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியின் சிறப்பினைத் தும்பைத் திணை, தானைமறத்தில் அமைந்த பாடலில் எடுத்துரைத்துள்ளார். வஞ்சியே, உன் பெரிய நாட்டிலே என்னோடும் போரிடுவார் உளரோ? என என்னைக் கேட்ட படைபலம் உடைய வேந்தனே! கேள். எம் நாட்டிலே அடிக்கும் கோலுக்கு எதிரே சீறி எழும் பாம்பு போன்ற வலிமை உடைய படை மறவர் கணக்கற்றோர். அவர்கள் மட்டுமன்று முடிவிலே காற்று மோத, அதனால் எழுந்த ஓசையையே போர்ப் பறையென்று மகிழ்ந்து எழும் எம் தலைவனும் உளன். இவை கண்டுமோ நீ கேட்கின்றாய் என்று அதியமான் நெடுமான் வஞ்சியின் வீரச் சிறப்பினை ஔவையார் எடுத்துரைத்துள்ளார்.

18. பாரியின் பறம்பு மலை எத்தகைய சிறப்புடையது?

வேள்பாரி என்னும் குறுநில மன்னன் பறம்புமலை சார்ந்த பகுதியை ஆட்சி புரியும் கொடை வள்ளல். அவன் நாடு மூங்கிலும், நெல்லும் பலாப்பழமும், வள்ளிக் கிழங்கும் தேனும் ஆகிய நான்கு விளைவுகள் உழவின்றியே கிடைப்பது. அத்தகைய பறம்பு நாடு வானளாவிய உயரமும் அகலமும் உடையது. அம்மலையின் சுனைகள் வான்மீன் போன்று எண்ணற்று விளங்கும். ஆகவே வளமை மிக்க நாடு. அந்நாட்டிலே மரத்துக்கு ஒரு யானை வீதம் நீவிர் கட்டியிருந்தீராயினும் இருக்கும் இடமெங்கும் தேரால் நிறைந்திருந்தீராயினும் பாரியை வெல்வது நும்மால் இயலாது. பாரியின் பறம்பு பகைவர்க்கு எளிதன்று. முரசு விளங்கும் நீவிர் மூவரும் கூடினும் அவனை வென்றி கொள்ளலும் ஆகாது. வாளினால் அவனை வெல்லவே இயலாது. அவன் நாட்டை அடைவது எவ்வாறெனில் பாடிப் பரிசில் பெறும் பரிசிலர் போல யாழிசையுடன் விறலியர் சூழ ஆடியும் பாடியும் நீர் சென்றீரானால் அவன் நாட்டையும் மலையையும் ஒரு சேர நமக்குப் பரிசிலாக வழங்கி விடுவான். அதுவே

Scanned by CamScanner

நீங்கள் அவன் நாட்டினை பெற சிறந்த வழி என்று கபிலர் பகை நாட்டு மன்னர்களுக்கு எடுத்துரைக்கின்றார்.

19. மன்னர்களின் கொடைத்திறத்தைப் புறநானூற்றுப் பாடல்கள் எங்ஙனம் வெளிப்படுத்தியுள்ளன?

**முன்னுரை**

புறநானூறு எட்டுத்தொகை நூல்களில் ஒன்று மன்னர்களின் ஆட்சி, கொடைத்திறம், வீரம், நட்பு போன்ற பலவற்றை எடுத்துரைக்கும் நூல். தமிழர்களின் வாழ்வியலையும் அறக்கருத்துக்களையும் கொண்ட பெட்டகமாக விளங்குவது. பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற நானூறு பாடல்களைக் கொண்ட புறநானூறு ஒரு தொகுப்பு நூலாக அமைவது.

**மன்னர்களின் கொடைத்திறம்:**

வேள்பாரியைச் சிறப்பித்துப் பாடிய கபிலர் பாரியின் பறம்பு மலையின் வளத்தினையும் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிறு முற்றினும்
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே
இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழம் மூழ்க்கும்மே"

மூங்கிலும், நெல்லும் பலாப்பழமும், வள்ளிக் கிழங்கும் தேனும் ஆகிய நான்கு விளைவுகள் உழவின்றியே கிடைப்பது. அத்தகைய பறம்பு நாடு வானளாவிய உயரமும் அகலமும் உடையது. அம்மலையின் சுனைகள் வான்மீன் போன்று எண்ணற்று விளங்கும். ஆகவே வளமை மிக்க நாடு. அந்நாட்டிலே மரத்துக்கு ஒரு யானை வீதம் நீவிர் கட்டியிருந்தீராயினும் இருக்கும் இடமெங்கும் தேரால் நிறைந்திருந்தீராயினும் பாரியை வெல்வது நும்மால் இயலாது. புாரியின் பறம்பு பகைவர்க்கு எளிதன்று. முரசு விளங்கும் நீவிர் மூவரும் கூடினும் அவனை வென்றி கொள்ளலும் ஆகாது. வாளினால் அவனை வெல்லவே இயலாது. அவன் நாட்டை அடைவது எவ்வாறெனில் பாடிப் பரிசில் பெறும் பரிசிலர் போல யாழிசையுடன் விறலியர் சூழ ஆடியும் பாடியும் நீர் சென்றீரானால் அவன் நாட்டையும் மலையையும் ஒரு சேர நமக்குப் பரிசிலாக வழங்கி விடுவான். அதுவே சிறந்த வழி.

**வரையாது சுரக்கும் வள்ளியோய்:**

கழைதின் யானையார் வல்வில் ஓரி என்னும் குறுநில மன்னரின் கொடைத்திறத்தைப் பாடாண் திணையில் பரிசில் துறையில் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஒன்றைத் தா என இரத்தல் இழிந்தது. அவ்வாறு இரந்தோர்க்கு ஈயேன் என மறுத்தலோ அதனினும் இழிவு உடையதாகும். கொள்வாயாக என ஒன்றைத் தானே விரும்பிக் கொடுத்தல் உயர்ந்ததும், அவ்வாறு கொடுப்பினும் கொள்ளேம் என்பது அதனினும் மிக உயர்ந்தது.

Scanned by CamScanner

"ஈயென இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்தன்றதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

தண்ணீர் வேட்கையினர் கடல்நீரை உண்ணார். ஆவும் மாவும் கலக்கிய சேற்றுநீர் எனினும் அத்தாழ்ந்த இடத்திற்குச் செல்லும் வழிகள் பலவாகும். இரவலர் பரிசில் பெறாத போது நாம் நாடி வந்தவரைப் பழித்துப் பேசாது தாம் புறப்பட்ட நேரத்தையும் புள் நிமித்தத்தையுமே பழிப்பர். அதனால் நீ எனக்கு இல்லை என்றனையேனும் நின்னை யான் வெறுப்பவன் அல்லேன். மழை போல வழங்கும் ஓரியே, நீ நீடு வாழ்வாயாக.

**முடிவுரை:**

கொடுப்பதில் சிறந்த மன்னர்களின் கொடைத் திறத்திற்குச் சான்றாக வேள்பாரியும் வல்வில் ஓரியும் விளங்கியதை கபிலரும், கழைதின் யானையாரும் தம் பாடல்களில் எடுத்துரைத்து தமிழகத்தின் சிறப்பினையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

20. பெருங்கடுங்கோ பற்றி குறிப்பு வரைக:-

கலித்தொகையில் முதற்பகுதியாகிய பாலைக் கலியைப் பாடியவர். சேரவேந்தருள் ஒருவர் சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ என அழைப்பர். கொடைப் பண்பும், வீரமும் உடைய நல்லரசராக விளங்கினாள். பாணருக்குப் பொற்றாமரையும் பாடினிக்கு பொன்னரி மாலையும் பரிசளித்துள்ளார். பாலைத் திணைப் பற்றி, அகநானூற்றில் 12 பாடல்கள், குறுந்தொகையில் 10 பாடல்கள், நற்றிணையில் 10 பாடல்கள் பாடியுள்ளார்.

21. கபிலர் பற்றி குறிப்பு வரைக:-

சங்க இலக்கிய பாடல்களுள் மிக அதிகமான எண்ணிக்கையுள்ள பாடல்களைப் பாடியுள்ளார். கலித்தொகையில் குறிஞ்சிக் கலியினைப் பாடியுள்ளார். குறிஞ்சி பாடிய கபிலர் என்று அழைப்பர். வள்ளல் பாரியின் நண்பராக விளங்கினார். புலனழுக்கற்ற அந்தணாளன் எனப் பாரட்டப்பட்டவர். ஆரிய அரசன் பிரகத்தன் என்பவனுக்கு தமிழ் அறிவித்தற்கு குறிஞ்சிப் பாட்டு பாடினார். குறிஞ்சிப் பாட்டில் 99 வகை மலர்களையும், பன்னிரண்டு ஆண்டுக்கொரு மலரும் குறிஞ்சிப் பூவையும் குறிப்பிட்டுள்ளார்.

22. கலித்தொகை குறிப்பு வரைக.

எட்டுத்தொகையில் அகநூலாக விளங்குகிறது. ஐந்து திணைகளில் அமைந்த பாடல்களை கபிலர், நல்லுருத்திரன், மருதனிள நாகனார், நல்லந்துனார், பெருங்கடுங்கோ ஆகியோர் பாடியுள்ளனர். 150

Scanned by CamScanner

பாடல்களைக் கொண்டது. மடலேறுதல், நீராடல், வரலாற்றுப் புராணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என பாடல்கள் அமைந்துள்ளன. பேரெல்லையாக 24 வரிகளும் அதற்கு மேலே உடையதாகவும் அமைந்துள்ளன. நாடக நயமும், உரையாடல் நயமும் கொண்டு கட்டுரைப் பாங்கிலும் பாடல்கள் உள்ளன.

23. பெருங்கடுங்கோ பாலைத் திணையில் பாடியுள்ள பாடற் கருத்திணைத் திணை, துறைகளுடன் விளக்குக.

**திணை** - பாலை

**துறை**: தலைவன் செலவுக் குறிப்பு அறிந்து நீர் செல்லும் கடுஞ்சுரத்துத் துன்பத்திற்குத் துணையாக எம்மையும் உடன் கொண்டு செல்மின் எனத் தலைவி கூறியது.

மலைகள் உயர்ந்து நிற்கும் வழியில் காட்டுப்பசு வேறெங்கும் தண்ணீர் இன்றி, அது சிறிதே உள்ள மரல்(கற்றாழை) செடியைத் தின்னுமாறு மழை பெய்யாமல் சுருங்கியது. வழிப்பறி செய்யும் வேடர்கள் எய்த அம்பு வழிப்போக்கின் உடம்பில் தைத்தமையால், அவர் தம் நாக்கு வறண்டு தண்ணீருக்காகத் தடுமாறித் தாகத்தால் அடைந்த துயரை அவர்களின் கண்ணீரே சிறிது தணிக்கும், இத்தகைய கொடுமையான காட்டுவழியில் செல்லத் துணிந்தேன் என்று எங்கள் நிலையை அறியாதவராய்க் கூறுகின்றூர். இதனால் என்ன பயன்? இது உமது இயல்புக்குப் பொருந்தாது. அன்பு நீங்கும் வகையில் சிந்தனை செய்யாமல் உமது வழித்துன்பத்துக்குத் துணையாக எம்மையும் அழைத்துச் செல்ல முடிவு செய்தால் அதை விட இன்பம் எமக்கு வேறுஉண்டோ?

24. கலித்தொகையில் குறிஞ்சிக் கலியில் அமைந்த பாடற்கருத்திணை விளக்குக.

**திணை** – குறிஞ்சி

**துறை** – நாற்றமும், தோற்றமும், ஒழுக்கமும், உண்டியும் செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும், புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வருஉம், உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை தன்னை அவள் மறையாமை காரணமாக, மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர்பொருள் நாட்டத்தான் தலைமகட்குத் தோழி கூறியது.

தோழியானவள் தலைவியின் களவொழுக்கத்தை அறிய வேண்டி அவளிடம், “நீலமலர் போன்று மைதீட்டிய கண்ணை உடையவளே! நுான் கூறுவதை உன் மனத்தால் ஆராய்ந்து பார். நுனக்கு ஒப்பில்லாதவன் வலிமை உடைய யானை முதலியவற்றின் பாதச் சுவட்டைத் தேடுவான் போல மாட்சிமை உடைய கண்ணியும், வில்லையும் உடையவனாய் வருவான். அவ்வாறு வந்து தான் உற்ற நோயைக் குறிப்பாலே நான் உணரக் காட்டுவதன்றி, எதுவும் கூறாமல் பலநாளும் கடந்து

Scanned by CamScanner

செல்கின்றான். ஒருநாள், நான் நாணமற்ற ஒரு செயலைச் செய்தேன். தினைப் புனத்தில் அருகே உள்ள ஊஞ்சலில் ஏறி ஆட அப்பொழுது அவன் அறியாது அவன் மேல் பொய்யாக விழுந்தேன். உடனே நீ இவ்விடமிருந்து விரைந்து செல்வாயாக என்று கூறினான். அத்தகைய பண்புடையவனாக தலைவன் உள்ளன்'' என்று கூறினாள்.

25. நோதக்க செய்த சிறுபட்டி யார்? அவன் செய்த செயல் யாது?

**நோதக்க செய்த சிறுபட்டி:**

ஒளி பொருந்திய வளையினை உடைய தோழியே! இங்கொன்றைக் கேள். தெருவில் ஆடும் நாம் மணலால் செய்த சிற்றிலை காலால் அழித்தும், கூந்தலில் சூடிய பூக்களை அறுத்தும், வரிப்பந்தை எடுத்துக் கொண்டு ஓடியும் நாம் நோகும்படியாகச் செய்த இவன் காவல் இல்லாதவன்.

**உண்ணு நீர் வேட்டேன்:**

முன்னொரு நாளிலே அன்னையும் நானும் தனித்து இருந்த பொழுது, வீட்டிலிருக்கின்றவர்களே குடிப்பதற்கு தண்ணீர் வேண்டும் என வந்தான். அன்னையும் பொன்னால் செய்த கரகத்தில் நீர் கொடுத்து வா என்றாள். நானும் சிறுபட்டியாய் இருந்த அவனை அறியாது தண்ணீர் தரச் சென்றேன். அப்பொழுது என் வளையணிந்த முன் கையைப் பிடித்து என்னை நலியச் செய்தான். அவன் செய்ததைக் கண்டு திடுக்குற்றுத் தாயே! இவனொருவன் செய்த செயலைப் பார்! என்றேன்.

**கள்வன் மகன்:**

தாயும் என் குரல் கேட்டு ஓடி வந்தாள். அவன் அவ்வாறு செய்ததை மறைத்து அவனுக்கு விக்கல் ஏற்பட்டது என்று ஒரு பொய்யைக் கூறினேன். அதனைத் தாயும் உண்மை என்று நம்பி அவன் முதுகைப் பலமுறை தடவிக் கொடுத்தாள். அப்பொழுது என்னைக் கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி நகைக் கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன் என்றாள்.

Scanned by CamScanner